வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2018

Term Examination, March - 2018

தரம் :- 12(2019)	தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்	நேரம் :- மூன்று மணித்தியாலம்

பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1) முதலாவது தன்னியக்க கணினி இயந்திரத்தை (automatic sequence controlled calculator) உருவாக்கியவர் யார்?
   (1) பிளேயஸ் பஸ்கால் (2) Forest (3) சாள்ஸ் பபேஜ்
   (4) ஹாவாட் அய்க்கின் (5) வொன் நியூமன்

2) பின்வருவனவற்றுள் செயலியின் எப்பகுதியினுள் கணித மற்றும் தர்க்கப்பகுதியின் சமிக்ஞைகளை தற்காலிகமாக சேமித்து வைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது?
   (1) L1 பதுக்கு நினைவகம் (2) கட்டுப்பாட்டலகு
   (3) பதிவகங்கள் (4) எழுமாற்று கையாள்கை நினைவகம்
   (5) எண்கணித தர்க்க அலகு

3) முழு எண் ஒன்று 8 பிற்றுக்களில் வகைக்குறிக்கப்படின், 23 ஐ வகைக்குறிக்கும் இரண்டின் நிரப்பு வடிவம் எது?
   (1) 00010111 (2) 11101000 (3) 11101001 (4) 00011000 (5) 11110111

4) பின்வரும் துணைத் தேக்கச் சாதனங்களுள், மிகவும் குறைவான கொள்ளளவைத் தரும் சாதனமாக கருதப்படுவது எது?
   (1) இறுவட்டு (2) இலக்கமுறை பல்திறவாற்றல் வட்டு (3) வன்வட்டு
   (4) காந்த நாடா (5) நெகிழ் வட்டு

agaram.lk

5) 100011_2துவித எண்ணிற்கு சமவலுவான எண் பின்வருவனவற்றுள் எது?
   (1) 34_{10} (2) 35_{16} (3) $8C_{16}$ (4) 83_{16} (5) 43_8

6) $AC_{16} + 1100101_2 =$
   (1) 111_{10} (2) $1F1_{16}$ (3) 111_{16} (4) $6CD_{16}$ (5) 111_8

7) பதின்ம எண் 12.125_{10}இற்குச் சமவலுவான எண்ம எண் பின்வருவனவற்றுள் எது?
   (1) 1100.1_8 (2) 14.01_8 (3) 14.11_8 (4) 14.1_8 (5) 1.1_8

8) தரப்பட்டுள்ள தருக்க சுற்றின் வருவிளைவு Q இற்கான பூலியன் கோவை பின்வருவனவற்றுள் எது?



   (1) A+B (2) (A.B)+B (3) A.B (4) A.B +B (5) A+B

9) $(x + y')\,(x' + y)$ எனும் பூலியன் கோவையின் சுருக்கிய பெறுமானம் எது?
   (1) x (2) y (3) $xy + x'y'$ (4) 0 (5) 1

10) கீழே காட்டப்பட்டுள்ள உலகளாவிய வாயில்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட இணைந்த தர்க்க சுற்றைக் கருதுக.



மேற்குறித்த சுற்றிற்குச் சமவலுவானது எது?

(1) AND வாயில் (2) OR வாயில் (3) NAND வாயில்
(4) NOR வாயில் (5) NOT வாயில்

11) பின்வரும் பதங்களைக் கருதுக.

A - Stream of sensor information B – Voice C – Photographs

மேற்குறித்தவற்றுள் எது/எவை பெரிய தரவுகளிற்கு(big data) உதாரணம்(கள்)ஆகும்?

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்
(4) A, C மட்டும் (5) A, B, C எல்லாம்

12) கீழ்வரும் நினைவக வகைகளைக் கருதுக.

A -பதிவகம் B - RAM C -பதுக்கு நினைவகம் D -காந்த நாடா

மேற்குறித்த நினைவக வகைகளுள் எது / எவை தொடரியல் அணுகு முறையை உடையது / உடையவை?

(1) A மட்டும் (2) A, C மட்டும் (3) D மட்டும்
(4) B மட்டும் (5) A, D மட்டும்

13) பின்வருவனவற்றுள் எக்கருவி மூளையின் செயற்பாடுகளை அவதானிப்பதற்காக முதலாவதாக உருவாக்கப்பட்டதும் மண்டையோட்டிற்கு வெளியாக பொருத்தப்படுவதால் இன்றும் மிகவும் பிரயோசனமுள்ளதாகவும் இருக்கின்றது?

(1) ECG (2) CAT (3) MRI (4) EEG (5) EXG

14) பின்வரும் பிற்றுத் தருக்க செய்பணியின் X வருவிளைவு யாது?

A = 00001101 B = 00001010 X = A and B

(1) 23_{10} (2) 8_{10} (3) 15_{10} (4) 7_{10} (5) 248_{10}

15) பின்வருவனவற்றுள் எது தனிப்பயனர் பற்பயன் பணிச்செயல்முறைமைஅன்று?

(1) Windows (2) Mac (3) DOS (4) Ubuntu (5) Fedora

16) பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?

(1) ROM இனைப் பொதுவாக ஆரம்பிக்கும் நினைவகம் (startup memory) என அழைப்பர்.
(2) புறச்சாதனங்களிற்கு இடையிலான தரவுத்தொடர்பாடலிற்கு பணிச்செயல்முறைமை உதவியாக இருக்கும்.
(3) பயன்பாட்டு மென்பொருட்கள் கணினியிலுள்ள வளங்களை பராமரித்தலினை மேற்கொள்ள உதவும்.
(4) பிரயோக மென்பொருட்கள் பயனர் கணினி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ள உதவும்.
(5) பிரயோக மென்பொருட்கள் பிரதான நினைவகத்திற்கு அதன் பிரயோகங்களை சுமத்தும். (load)

agaram.lk

17) முறைவழி ஒன்றிற்கு ஏதேனும் அறிவுறுத்தல்கள் கிடைத்த நேரம் முதல் அதனைச் செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கும் வரையான காலம் ………………….. என அழைக்கப்படும்.
(1) சாதித்த நேரம் (2) முழு செயல்நேரம் (3) காத்திருப்பு நேரம்
(4) பதிலளிப்பு நேரம் (5) செயற்படு நேரம்

18) பல்நிரலாக்கலில் நுண்செயலியின் நேரம் பல செயல்களுக்கு ஒதுக்கிக் கொள்ளக் கூடிய திறமையை பணிச்செயல் முறைமை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாற்றல் கொண்ட பணிச்செயல்முறைமையை …………………….. என அழைப்பர்.
(1) தொடர்முறை முறைவழிப்படுத்தல் (2) எளிய தொகுதி முறைமை
(3) பல்நிரலாக்கப்பட்ட தொகுதி முறைமை (4) நேரப்பகிர்வு முறைமை
(5) தொகுதி முறைவழிப்படுத்தல்

19) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A – நினைவக முகாமைத்துவம் B – முறைவழி அட்டவணைப்படுத்தல்
C – வைரஸைக் கண்டறிதல் D – பயனர் இடைமுகம்
மேற்குறித்தவற்றுள் பணிச்செயல் முறைமையின் பிரதான தொழிற்பாடு(கள்) எது / எவை?
(1) A, B, C மட்டும் (2) A, B மட்டும் (3) A, B, D மட்டும்
(4) B, D மட்டும் (5) A, B, C, D எல்லாம்

20) பல்கொள்பணி தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
(1) சந்தர்ப்ப ஆளிமுறைமையை பாவித்து பல பிரயோக செய்நிரல்களுக்கிடையே பல நுண் முறையாக்கிகளை பகிருதல்.
(2) சந்தர்ப்ப ஆளிமுறைமையை பாவித்து பல பிரயோக செய்நிரல்களுக்கிடையே ஒரு நுண் முறையாக்கியைப் பகிருதல்
(3) பல பிரயோக செய்நிரல்களை தொகுதியாக முறைவழிப்படுத்தல்.
(4) பல பிரயோக செய்நிரல்களை உடனுக்குடன் முறைவழிப்படுத்தல்.
(5) செய்நிரல்களை உபபகுதிகளாக பிரித்து சமாந்தரமாக நிறைவேற்றப்படுதல்.

agaram.lk

21) நிலைபொருள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - கணினித் தொகுதியைத் தொடக்குவதற்குத் தேவையான செய்நிரலாகும்.
B - சலவை இயந்திரத்தில் நிலைபொருள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
C - நிலைபொருளைப் இலகுவாக மாற்றியமைக்க முடியாது.
மேற்குறித்தவற்றுள் எது / எவை சரியானது / சரியானவை?
(1) A மட்டும் (2) B மட்டும் (3) A, B மட்டும்
(4) B, Cமட்டும் (5) A, B, C எல்லாம்

22) உபவலை மறைமுகம் 255.255.255.224 இனை உடைய உபவலை ஒன்றில் ஒப்படைக்கப்படக் கூடிய விருந்தோம்பு கணினிகளின் அதிகூடிய எண்ணிக்கை யாது?
(1) 14 (2) 15 (3) 16 (4) 30 (5) 32

23) ஒரு *IPV*6 முகவரியின் நீளம் எவ்வளவு?
(1) 32 bits (2) 128 bits (3) 64 bits (4) 128 bytes (5) 32 bytes

24) பின்வருவனவற்றுள் எச் சேவைகள் *TCP* இனை பயன்படுத்துகின்றது?
A – DHCP B – SMTP C – HTTP D – FTP
(1) A, B, C மட்டும் (2) A, B மட்டும் (3) B, C, D மட்டும்
(4) B, D மட்டும் (5) A, B, C, D எல்லாம்

25) பின்வருவனவற்றுள் எது தனிப்பட்ட (*private*) *IP* முகவரியாகும்?
(1) 12.0.0.1 (2) 168.172.19.39 (3) 172.15.14.36
(4) 192.168.24.43 (5) 12.168.8.3

26) IP வடிவமைப்பு (configuration), IP முகவரி, உபவலை மறைமுகம் (subnet mask), இயல்பிருப்பு நுழைவாயில்கள் (default gateway), DNS தகவல்கள் ஆகியவை அடங்கிய பொறிமுறை ஒன்றினை உருவாக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய செம்மை நடப்பு (protocol) பின்வருவனவற்றுள் எது?

(1) SMTP (2) SNMP (3) DHCP (4) ARP (5) FTP

27) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – மாய நினைவகம் வன்வட்டிலிருந்து உருவாக்கப்படலாம்.

B - மாய நினைவகம் பிரதான நினைவகத்திலிருந்து உருவாக்கப்படலாம்.

C – மாய நினைவகம் என்பதுதொடர்ச்சியான பணிக்கு நினைவகத்தை வழங்கக் கூடிய ஓர் உத்தியாகும்.

மேற்குறித்த மாய நினைவகம் பற்றிய கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?

(1) A மட்டும் (2) B மட்டும் (3) A, B மட்டும்

(4) B, C மட்டும் (5) A, B, C எல்லாம்

28) முறைவழி கட்டுப்பாட்டுக் கட்டம் (*Process Control Block*) ஆனது கொண்டிருக்க முடியாதது பின்வருவனவற்றுள் எது?

(1) தற்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் முறைவழி

(2) முன்னுரிமை மட்டம் ஏனைய செயன்முறைகள் சார்பானது

(3) நிகழ்வின் அடுத்த அறிவுறுத்தலுக்கான முகவரி வெளிப்படுத்தப்படவேண்டும்.

(4) உள்ளீடு, வெளியீடு தொடர்பான தகவல்கள்.

(5) முன்னுரிமை மட்டம் ஏனைய தரவுகள் சார்பானது.

29) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - பணிச்செயல் முறைமையையும் செய்நிரல் கோப்புக்களையும் வேறுபடுத்தி பெறுதல்.

B - கோப்புக்களைத் திறமையாக மீட்கும் (retrieve) ஆற்றல்.

C - துண்டாக்கப்பட்ட தரவுகளை ஒழுங்குபடுத்துவதற்கான முறைவழி

மேற்குறித்த கூற்றுக்களுள் வட்டுப் பிரிவிடலின் நன்மை(கள்) எது / எவை?

(1) C மட்டும் (2) B, C மட்டும் (3) A, C மட்டும்

(4) A, B மட்டும் (5) A, B, C எல்லாம்

agaram.lk

30) பணிச்செயல் முறைமை ஒன்றின் முறைவழி முகாமைச் செயற்பாடாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?

(1) முறைவழி அட்டவணைப்படுத்தலை முகாமை செய்தல்.

(2) உள்ளீட்டு மற்றும் வெளியீட்டுக் கருவிகளை கையாளுதல்.

(3) ஒவ்வொரு முறைவழிக்குமான CPU நேரத்தை ஒதுக்குதல்.

(4) முறைவழிகளின் ஒழுங்கு

(5) மாற்றப்பட்டதும் காத்திருப்பதுமான முறைவழிகள்

31) பின்வருவனவற்றில் ஆகக் கூடியது 254 விருந்தோம்புனர் முகவரிகளை மட்டும் ஒவ்வொரு வலையமைப்பிலும் வழங்குவது எந்த வகுப்பு IP முகவரி ?

(1) A (2) B (3) C (4) D (5) E

32) கணினி வலையமைப்பு வடிவத்தைச் சரிபார்க்கப் பயன்படுத்தப்படும் கட்டளை பின்வருவனவற்றுள் எது?

(1) netstst (2) hostname (3) tracert (4) ipconfig (5) ping

33) வழிப்படுத்திகளை (routers) பயன்படுத்தும் OSI அடுக்கு பின்வருவனவற்றுள் எது?

(1) போக்குவரத்து (2) பிரயோக (3) வலையமைப்பு

(4) தரவிணைப்பு (5) அமர்வு

34) நொய்தாக்கலைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் பின்வருவனவற்றுள் எது / எவை?

A – வழிப்படுத்தி
B – மீள்செய்யி (Repeater)
C – விரியலாக்கி (Amplifier)
D – ஆளி

(1) A, C மட்டும் (2) B, C மட்டும் (3) A, D மட்டும்
(4) C, D மட்டும் (5) A, D மட்டும்

35) மட்டுப்படுத்தப்படாத பரவலாக்கப்பட்ட வலையமைப்பு நிர்வாகத்தைக் கொண்ட வலையமைப்பு வகை பின்வருவனவற்றுள் எது?

(1) சகபாடி (Peer to Peer)
(2) சேவைப்பயனர் சேவையகம் (Client Server)
(3) கட்டுப்பாட்டு பயனர் (Control Client)
(4) புள்ளியிலிருந்து புள்ளிக்கான (Point to Point)
(5) முடிவிடத்திலிருந்து முடிவிடம் (end to end)

36) கணினி வலையமைப்பில் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய அச்சுறுத்தல் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

(1) ஏமாற்று (Spoofing)
(2) மோசடியான மாற்றம் செய்தல் (Tempering)
(3) சேவை வழங்கல் மறுப்பு (Denial of Services)
(4) பிஷிங் (Phishing)
(5) தேன் சாடி (Honey pots)

37) ....ஆனது தற்போதைய வழிமுறைகளை செயற்படுத்தத் தேவையான அடுத்த அறிவுறுத்தல்களின் முகவரியை வழங்குகின்றது.

(1) CPU பதிவகம் (2) செய்நிரல் எண்ணி (Program Counter)
(3) முறைவழி ஸ்ரக் (Process Stack) (4) Pipe
(5) முறைவழிவரிசை (Process Queue)

agaram.lk

38) முறைவழி கட்டுப்பாட்டுக் கட்டம் என்பது ....

(1) முறைவழி வகை மாறி (Process type variable)
(2) தரவுக் கட்டமைப்பு (Data Structure)
(3) துணைச் சேமிப்பு பகுதி (Secondary Storage section)
(4) நினைவகத்தின் ஒரு கட்டம் (A block in memory)
(5) முறைவழிப் பதிவகம் (Process register)

39) தொடர்ச்சியான நினைவக ஒதுக்கீடு (contiguous memory allocation) பற்றிய கூற்றுக்களுள் சரியானது பின்வருவனவற்றுள் எது?

(1) ஒவ்வொரு முறைவழியும் ஒரு தனி நினைவகப் பகுதியை கொண்டுள்ளது.
(2) எல்லா முறைவழிகளும் ஒரு தனி நினைவகப் பகுதியை கொண்டுள்ளது.
(3) நினைவக வெளி தொடர்ச்சியானது.
(4) அதிக முகவரி வெளியினை முறைவழிகளுக்கு வழங்குகின்றது.
(5) முறைவழிகளுக்குவேறுபட்ட முகவரி வெளியினை வழங்குகின்றது.

40) பின்வருவனவற்றுள் CPU ஆல் உருவாக்கப்படுகின்ற முகவரி எது?

(1) பௌதீக முகவரி (Physical address) (2) முற்றுறு முகவரி (Absolute address)
(3) தர்க்க முகவரி (Logical address) (4) மாய முகவரி (Virtual address)
(5) தொடர்பு முகவரி (Relative address)

FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2018

Term Examination, March - 2018

தரம் :- 12(2019)	தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்	

பகுதி – II A
அமைப்புக்கட்டுரை வினாக்கள்

1) a) 18_{10} , -23_{10} எனும் பெறுமானங்களை இரண்டின் நிரப்பு எண்களிற்கு மாற்றுக. எண்ணை வகைகுறிப்பதற்கு 8 bits ஐப் பயன்படுத்துக?

b) மேலே a இல் பெறப்பட்ட இரண்டின் நிரப்பு எண்களைப் பயன்படுத்தி $18_{10} - 23_{10}$ இன் பெறுமதியைக் கணித்து, விடையை இரண்டின் நிரப்பு வடிவில் தருக?

agaram.lk

c) நேர் எண்களினதும் மறை எண்களினதும் இரண்டின் நிரப்பு எண்களை எவ்வாறு தசம எண்ணிற்கு மாற்றலாம் என விளக்குக?

2) a) பணிச்செயல் முறைமை ஒன்றில் செய்நிரலிற்கும் (program) செயன்முறைக்கும் (process) இடையிலான தொடர்புடைமை யாது?

b) பணிச்செயல் முறைமைக்கும் கணினி வன்பொருளுக்கும் இடையிலான தொடர்புடைமை யாது?

c) பின்வரும் மென்பொருள்கள் பணிச்செயல் முறைமையா அல்லது பிரயோக மென்பொருளா என வகைப்படுத்துக?

GIMP. Vectorian, Isuru Linux, Android, DOS, Corel Draw

agaram.lk

d) முறைவழியாக்கியின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு பணிச்செயல்முறைமையில் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் 2 தருக?

3) a) OSI அடுக்குகள் அனைத்தையும் எழுதுக?

b) IP முகவரி *172.16.66.0/21* இன் உபவலை மறைமுகம் மற்றும் வலையமைப்பு முகவரி யாது?

c) உங்களிற்கு *5* உபவலையும் அதில் ஆகக் குறைந்தது *16* விருந்தோம்புனர்களும் தேவை. இதற்கு உகந்த உபவலை மறைமுகத்தைகீழ்வரும் பட்டியலிலிருந்து எழுதுக (எல்லாக் கணிப்புக்களும் காட்டப்பட வேண்டும்)

பட்டியல் :- *255. 255. 255. 240, 255. 255. 255. 224*

4) a) ஒவ்வொரு தலைமுறைக் கணினிகளிலும் பயன்படுத்தப்படும் பிரதான தொழினுட்பங்களை கீழுள்ள அட்டவணையில் பூர்த்தி செய்க?

தலைமுறை	தொழினுட்பம்
2	
4	
5	

agaram.lk

b) கணினி முறைமை ஒன்றின் அடிப்படைக் கூறுகள் எவை?

c) கணினிக்கு புதிய சாதனங்களைப் பொருத்தும்போது அது தன்னியக்கமாக நிறுவுதலுக்கு அனுமதிக்கும். நவீன பணிச்செயல்முறைமைகளின் பண்புகளை எவ்வாறு அழைக்கலாம்?

d) SRAM, DRAM குறித்துப் பின்வரும் அட்டவணையின் முதலாம் நிரலில் நிரற்படுத்தப்பட்டுள்ள இயல்புகளுக்கு ஒத்த இரண்டாம் நிரலிலும் மூன்றாம் நிரலிலும் உள்ள மிகவும் பொருத்தமான நுழைவைச் சுற்றி வட்டமிடுக?

	SRAM	DRAM
வேகம்	கூடியது / குறைந்தது	கூடியது / குறைந்தது
நினைவக அடர்த்தி	கூடியது / குறைந்தது	கூடியது / குறைந்தது
புத்துணர்வூட்டல்	உண்டு / இல்லை	உண்டு / இல்லை

தரம் :- 12(2019)	தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்	

பகுதி II B

விரும்பிய இரண்டு வினாக்களிற்கு விடையளிக்குக.

1) பெருந்தெருவொன்றில் பச்சை, சிவப்பு, மஞ்சள் ஆகிள மூன்று விளக்குகள் உள்ளன. வாகன நெரிசல் காணப்படும் சந்தர்ப்பங்களில் மாற்றுப்பாதையை தீர்மானிப்பதற்கு இவ் விளக்குகள் ஒளிரும் சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு

சந்தர்ப்பங்கள்	நிலை
மாற்றுப்பாதை திறத்தல்	0
மாற்றுப்பாதை மூடுதல்	1
பச்சை விளக்கு ஒளிர்தல்	1
பச்சை விளக்கு ஒளிராமை	0
சிவப்பு விளக்கு ஒளிர்தல்	1
சிவப்பு விளக்கு ஒளிராமை	0
மஞ்சள் விளக்கு ஒளிர்தல்	1
மஞ்சள் விளக்கு ஒளிராமை	0

agaram.lk

பின்வரும் சந்தர்ப்பங்களில் மாற்றுப்பாதையானது திறக்கப்படும்.

- பச்சை விளக்கு ஒளிராத போது சிவப்பு விளக்கு ஒளிரும்போது
- பச்சை விளக்கு ஒளிரும் போது சிவப்பு விளக்கு அல்லது மஞ்சள் விளக்கு ஒளிரும் போது

a) மேற்குறித்த மாற்றுப்பாதை திறப்பதற்கான மெய்நிலை அட்டவணையை தயாரிக்குக?

b) மேலே a இல் பெறப்பட்ட அட்டவணையைக் கருத்திற் கொண்டு அதற்கான *POS* கோவையை எழுதுக?

c) மேலே b இல் பெறப்பட்ட *POS* கோவையை $k-map$ இனைப் பயன்படுத்திச் சுருக்குக?

d) சுருக்கப்பட்ட கோவையிற்கான தருக்க சுற்றை வரைக?

2) a) பணிச்செயல் முறைமை ஒன்றில் செயன்முறை நிலைமாற்று வரைபடத்தின் ஏழு படிநிலைகளையும் எழுதுக?

b) மேலே a இல் எழுதப்பட்ட படிநிலைகளில் பிரதான நினைவகத்தில் நடைபெறும் முறைவழிகளை எழுதுக?

c) சந்தர்ப்ப ஆளிமுறையின் போது பணிச்செயல் முறைமை இனால் நிகழ்த்தப்படும் பிரதான செயற்பாடுகளை விளக்குக?

d) கணினிக்கு 16bits மெய்நிகர் நினைவக முகவரி வெளி (virtual memory address space) இருக்கும் அதேவேளை அதில் ஒரு பக்க முகவரிக்கு (page address) 6bits பயன்படுத்தப்படுகின்றன. மேற்குறித்த பக்க முகவரியிடல் மூலம் வரையறுக்கப்பட்ட பக்கங்களின் மொத்த எண்ணிக்கையைக் காண்க?

3) a) அதிகளவான தரவு (Big Data) இனை வரையறை செய்க?

b) ஊடுகடத்தல் தொழினுட்பங்களின் (transmission technology) வகைகளை எழுதுக?

c) கணினிக்கும் விசைப்பலகைக்கும் இடையில் தொடர்பாடலை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும் ஊடுகடத்தல் முறை யாது? அதனை சுருக்கமாக விளக்குக?

d) பின்வரும் விடயங்களிற்கு பொருத்தமான பதங்களை பட்டியலிலிருந்து தெரிவு செய்க?

1) ஒரு தொகுதி விதிகளை தரவு தொடர்பாடலில் வரையறுப்பது
2) புளுடூத் இற்கு உதாரணமாக அமைவது
3) ஒவ்வொரு வலையின் இடைமுகத்திற்கான தனிப்பட்ட முகவரி
4) ஒத்திசை சமிஞ்ஞை வழக்கமான இடைவெளிகளில் *16 bits* பெறுமதியில் வகை குறிக்கப்படுகின்றது

பட்டியல் :- தனிநபர் பரப்பு வலையமைப்பு (Personal Area Network) , துடிப்பு குறிமுறை மட்டிசைப்பு (Pulse Code Modulation), செம்மை நடப்பு (Protocol), MAC முகவரி, IP முகவரி, வீச்செண் மட்டிசைப்பு (Amplitutde Modulation).

e) பின்வரும் வலையமைப்புச் சாதனங்களின் தொழிற்பாடுகளை எழுதுக?

1) Gateway 2) Bridge

agaram.lk